# இலங்கையில் மனித உரிமைகள் நிலைமை தொடர்பான வாய்மொழி மூலமான இற்றைப்படுத்தல்

**மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது அமர்வு**

**மனித உரிமைகளுக்கான ஐ நா உயர் ஆணையாளர் மிச்சல் பச்லெட் அவர்களின் அறிக்கை**

**ஜெனீவா, செப்டம்பர் 13, 2021**

மதிப்புக்குரிய தலைவர் அவர்களே,

மான்புமிக்கவர்களே,

இலங்கை நிலவரம் தொடர்பாக மனித உரிமைகள் பேரவையில் இந்த இற்றைப்படுத்தலைச் சமர்ப்பிப்பதிலும், எனது இறுதி அறிக்கையில் அடையாளம் காணப்பட்டிருந்த போக்குகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பான தற்போதைய நிலையைச் சமர்ப்பிப்பதிலும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த இற்றைப்படுத்தலைத் தயாரிப்பதற்கென அரசாங்கத்தினால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த உள்ளீடுகளை நான் நன்றியுடன் இங்கு குறிப்பிடுகிறேன். ''பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு ஐ நா வுடன் இணைந்து செயற்படுவதற்கெனவும்'', ''தேவையான நிறுவன ரீதியான சீர்திருத்தங்களை'' அமுல் செய்வதற்கும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருப்பதாகவும் ஜூன் மாதத்தில் வெளியிடப்பட்ட ஜனாதிபதியின் அறிக்கையையும் இங்கு கவனத்தில் எடுக்கின்றேன். இது தொடர்பாக திட்டவட்டமான நடவடிக்கைகள் இடம்பெறுவதனை பார்ப்பதற்கு ஆவலாக உள்ளேன் - எமது அறிக்கைகளிலும், பல்வேறு மனித உரிமைகள் பொறிமுறைகளின் அறிக்கைகளிலும் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகளின் அடிப்படையில் அவை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இந்த விடயம் தொடர்பாக கூட்டாக செயற்படுவதற்கு எமது அலுவலகம் தயாராக இருந்து வருகின்றது.

2021 ஜனவரி மாதம் நியமனம் செய்யப்பட்ட தேசிய விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கைகள் தாமதமின்றி பகிரங்கமாக வெளியிடப்பட வேண்டும் எனவும் நான் கேட்டுக் கொள்கிறேன். அந்த ஆணைக்குழுவின் பணி மற்றும் பரிந்துரைகள் என்பவற்றை மதிப்பிடப்படுவதற்கு இடமளிக்கும் விதத்தில் இந்த ஆண்டு முடிவுக்குள் அந்த ஆணைக்குழு தனது பணிப்பானையைப் பூர்த்தி செய்யும் என நான் கருதுகிறேன்.

இலங்கை தற்பொழுது எதிர்கொண்டிருக்கும் சமூக, பொருளாதார மற்றும் ஆளுகை தொடர்பான சவால்கள், அடிப்படை உரிமைகள், பொது மக்களுக்கான வெளி, ஜனநாயக நிறுவனங்கள், சமூக ஒத்திசைவு மற்றும் நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தி என்பவற்றின் மீது இராணுவமயமாக்கல் மற்றும் போதிய அளவிலான பொறுப்புக் கூறல் இண்மை என்பன எடுத்து வரக்கூடிய அழிவுகரமான தாக்கத்தை எடுத்துக் காட்டுகின்றன.

தீவிரமடைந்து வரும் பொருளாதாரச் சரிவுக்கு மத்தியில் உணவுப் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடுகள் என்பவற்றை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் இலங்கையில் ஆகஸ்ட் 30 ஆம் திகதி ஒரு புதிய அவசர நிலை பிரகடனம் மேற்கொள்ளப்பட்டது. அவசரகால ஒழுங்குவிதிகள் மிகவும்

விரிவான இயல்பைக் கொண்டவையாகயிருந்து வருவதுடன், குடிமக்கள் கருமங்களில் இராணுவத்தின் வகிபங்கினை அவை மேலும் விரிவாக்க முடியும். இந்த ஒழுங்குவிதிகளின் பிரயோகத்தை எமது அலுவலகம் உன்னிப்பாக அவதானித்து வரும்.

ஜனாதிபதி அண்மையில் ஒரு சில சிவில் சமூகத் தலைவர்களுடன் நடத்திய சந்திப்பினை நான் ஆர்வத்துடன் அவதானத்திலெடுப்பதுடன், இலங்கையில் பொதுமக்களுக்கான வெளியைத் திறந்து விடும் பொருட்டு விரிவான உரையாடல்களும், படிமுறைகளும் இடம்பெற வேண்டுமென நான் உற்சாகப்படுத்துகின்றேன். மனித உரிமைப் பாதுகாவலர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் காணாமற் போனவர்களின் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் மீதான கண்காணிப்பு, அச்சுறுத்தல் மற்றும் நீதித்துறை சார்ந்த துன்புறுத்தல் என்பன கவலையூட்டும் விதத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்திருப்பது மட்டுமன்றி, அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சித்து வரும் மாணவர்கள், கல்விமான்கள், மருத்துவத் துறை ஆளணியினர் மற்றும் சமயத் தலைவர்கள் ஆகிய பரந்த வீச்சிலான தரப்பினரையும் உள்ளடக்கும் விதத்தில் அவை விரிவடைந்துள்ளன. சமாதானமான முறையில் இடம்பெற்ற பல எதிர்ப்புச் செயற்பாடுகள் மற்றும் நினைவேந்தல் நிகழ்வுகள் என்பன மிதமிஞ்சிய அளவிலான பலவந்தத்தின் மூலம் எதிர்கொள்ளப்பட்டிருப்பதுடன், ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்றவர்கள் ஒன்றில் கைது செய்யப்பட்டுள்ளார்கள்; அல்லது தனிமைப்படுத்தல் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

சிவில் சமூக குழுக்கள் தொடர்பான புதிய ஒழுங்குவிதிகள் வரையப்பட்டு வருவதுடன், அவை அடிப்படைச் சுதந்திரங்கள் மீதான கட்டுப்பாடுகளை மேலும் இறுக்கமடையச் செய்ய முடியுமென பரவலாக அச்சம் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பாக பொது மக்களுக்கு மத்தியில் சாத்தியமான அளவுக்கு விரிவான மட்டத்தில் கலந்துரையாடல்கள் இடம்பெறுவதனை சாத்தியப்படுத்தும் பொருட்டு இந்த வரைவு பகிரங்கப்படுத்தப்பட வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பிட்ட சில குறியீட்டு ரீதியான மனித உரிமை மீறல் வழக்குகளின் நீதித்துறை விசாரணை நடைமுறைகளில் இடம்பெற்று வரும் மாற்றங்கள் குறித்தும் நான் கவலையடைந்துள்ளேன். அவற்றில் 2008 மற்றும் 2009 ஆகிய ஆண்டுகளின் போது பதினொரு பேர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான வழக்கும் அடங்குகிறது. முன்னால் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவிற்கு எதிரான குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து முன்னெடுக்கப் போவதில்லை என சட்டமா அதிபர் தீர்மானித்துள்ளார்.

2019 இல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக பல்வேறு விதமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்த போதிலும் அதனால் பாதிக்கப்பட்டவர்களும், சமயத் தலைவர்களும் இந்தச் சம்பவங்கள் தொடர்பாக உண்மை மற்றும் நீதி என்பன உடனடியாக தெரியப்படுத்தப்பட வேண்டுமென தொடர்ந்தும் கோரிக்கைகளை விடுத்து வருகின்றனர். மேலும், இந்தத் தாக்குதல்களுக்கு இடமளித்த சந்தர்ப்ப சூழ்நிலைகளின் முழுமையான விபரமும் வெளியிடப்பட வேண்டும் என அவர்கள் கூறுகின்றார்கள்.

2011 ஆம் ஆண்டில் அரசியல்வாதி ஒருவரை கொலை செய்ததாகக் குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்த முன்னைய பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு அண்மையில் ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட மன்னிப்பு, சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதித்துறைச் செயன்முறை என்பவற்றின் மீதான நம்பிக்கையை மேலும் சீர்குலைக்கும் ஆபத்தைக் கொண்டுள்ளது என்பதனை எடுத்துக் காட்டுகின்றது.

பொலிஸ் தடுப்புக் காவலில் மேலும் அதிகளவில் இடம்பெற்று வரும் மரணங்கள் குறித்தும், போதைவஸ்துக் குற்றவாளிக் கும்பல்கள் என கருதப்படுபவர்களுடன் போலிஸார் நிகழ்த்தும் எதிர்கொள்ளல்களின் பின்னணியில் இடம்பெற்று வரும் மரணங்கள், அதே போல சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள் சித்திரவதை மற்றும் துன்புறுத்தல் என்பவற்றை நிகழ்த்தி வருவதாக

தொடர்ச்சியாக கிடைத்து வரும் அறிக்கைகள் என்பன குறித்து நான் ஆழ்ந்த கவலையடைந்துள்ளேன்.

மார்ச் மாதத்தில் புதிய ‘‘தீவிரமயமாக்கல் எதிர்ப்பு’’ ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்டதுடன், அது தனிநபர்களை வழக்கு விசாரணை இல்லாமல் இரண்டு வருடங்கள் வரையில் தன்னிச்சையான விதத்தில் நிர்வாகத் தடுப்புக் காவலில் வைத்திருப்பதற்கு இடமளிக்கின்றது. இந்த ஒழுங்குவிதிகளின் அமுலாக்கத்திற்கு உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடையொன்றை வழங்கியிருக்கும் விடயத்தைக் கவனத்தில் எடுக்கின்றேன். மேலும், இந்தக் கட்டளைக்குச் சவால் விடுக்கும் அடிப்படை உரிமை மனுக்களையும் அது பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டிருக்கின்றது. பயங்கரவாதக் குழுக்களுடன் தொடர்புகளைக் கொண்டிருந்ததாக கூறி அரசாங்கம் 300க்கும் மேற்பட்ட தமிழ் மற்றும் முஸ்லிம் குழுக்களைத் தடை செய்துள்ளது; அல்லது பட்டியலிட்டுள்ளது.

பிரச்சினைக்குரிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டு, தமது தண்டனைக் காலத்தின் முடிவை அண்மித்திருந்த 16 சிறைக்கைதிகளுக்கு ஜூன் 16 ஆம் திகதி மன்னிப்பு வழங்கப்பட்டது. மேலும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பவர்கள் தமது வழக்குகள் மீளாய்வுக்குட்படுத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்து, விண்ணப்பிப்பதற்கான ஒரு ஆலோசனைச் சபையையும் ஸ்தாபித்துள்ளது. நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் இருந்து வரும் இந்தச் சம்பவங்கள் விரைவாகத் தீர்க்கப்பட வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தை மீளாய்வு செய்வதற்கான அதன் எண்ணத்தை அரசாங்கம் மீள் உறுதிப்படுத்தியிருப்பதுடன், இந் நோக்கத்திற்கென அமைச்சரவை உப குழுவொன்றை நியமனம் செய்துள்ளது. எவ்வாறிருப்பினும், ஆட்களைக் கைது செய்வதற்கும், தடுத்து வைப்பதற்குமென இச்சட்டம் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வரும் விடயம் குறித்து நான் ஆழமாக கவலையடைந்துள்ளேன். சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் இச்சட்டத்தின் கீழ் கடந்த 16 மாத காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பதுடன், இது தொடர்பாக நீதிமன்றத்தின் முன் இதுவரையில் நம்பகமான சாட்சியங்கள் எவையும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. அதே போல, ஆசிரியர் மற்றும் கவிஞரான அஹ்னாப் ஜெசீம் குற்றச்சாட்டுக்கள் எதுவும் இல்லாமல் 2020 மே மாதம் தொடக்கம் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இந்தச் சட்டத்தின் பாவனை தொடர்பாக உடனடியாக ஒரு தடை அறிவிக்கப்பட வேண்டுமென்றும், விரிவான அதன் மீளாய்வு அல்லது நீக்கம் என்பவற்றுக்கென தெளிவான ஒரு கால அட்டவணை உருவாக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இழப்பீடுகளுக்கான ஒரு தேசிய கொள்கைக்கு ஆகஸ்ட் மாதம் ஒப்புதல் வழங்கப்பட்டதுடன், இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் மற்றும் நல்லிணக்க நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்ந்து இடம்பெற்று வந்துள்ளன. காணாமற் போன ஆட்கள் தொடர்பான அலுவலகம் தொடர்ந்து செயற்பட்டு வந்துள்ளது. அதன் 6வது பிராந்திய அலுவலகம் கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது - ஆனால், அது பாதிக்கப்பட்ட மக்களுக்கு மத்தியில் நம்பிக்கையைத் தூண்டுவது அவசியமாகும். வெளிப்படையான, பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்ட, பால்நிலைக் கூறுகளுடன் கூடிய அணுகுமுறையொன்றின் முக்கியத்துவத்தை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். மேலும், இழப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்களுடன் இணைந்த விதத்தில் பரவலான உண்மை மற்றும் நீதி வழிமுறைகள் எடுத்து வரப்படுதல் வேண்டும்.

*தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் உலகளாவிய கூட்டமைப்பு (Global Alliance of National Human Rights Institutions)* தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பான விசேட மீளாய்வொன்றை துவக்கி வைப்பதற்கு கடந்த மாதம் தீர்மானித்திருந்தது என்ற விடயத்தை இங்கு நான் கவனத்தில் எடுக்கின்றேன். பாரிஸ் கோட்பாடுகளுடன் அது இணங்கி ஒழுகுவதை நிர்ணயித்துக் கொள்வதற்கென இந்த மீளாய்வு மேற்கொள்ளப்படவுள்ளது. ஆணைக்குழுவின்

நியமனச் செயன்முறை, அதன் மனித உரிமை பணிப்பானையை நிறைவேற்றி வைக்கும் விடயத்தில் அதன் செயல்திறன் என்பன குறித்து அது கவனம் செலுத்துகின்றது.

இந்தப் பின்புலத்தின் எதிரில் பிரேரணை 46/1 இன் பொறுப்புக் கூறல் தொடர்பான விடயங்களை அமுல் செய்வதற்கான எனது அலுவலகத்தின் பணி ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன், ஆரம்ப அணியொன்றின் ஆட்சேர்ப்பு இப்பொழுது மேற்கொள்ளப்படவிருக்கின்றது. ஏற்கனவே, ஐ நா அமைப்பு வைத்திருக்கும் சுமார் 120,000 தனிப்பட்ட விடயங்களுடன் இணைந்த விதத்தில் நாங்கள் தகவல் மற்றும் சான்று சேகரம் ஒன்றை அபிவிருத்தி செய்துள்ளோம். இந்த ஆண்டு இது தொடர்பாக முடியுமான அளவு மேலும் தகவல்களைச் சேகரிக்கும் பணிகளை நாங்கள் துவக்கி வைக்க உள்ளோம். எனது அலுவலகம் இந்தப் பணியை முழுமையாக அமுல் செய்யும் பொருட்டு அதற்குத் தேவையான ஆதரவினை வரவு செலவுத் திட்ட செயன்முறைக்கு ஊடாக வழங்கப்படுவதனை உறுப்பு அரசுகள் உறுதி செய்து கொள்ள வேண்டும் என நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இலங்கையில் இடம்பெற்று வரும் மாற்றங்கள் தொடர்பாக பேரவை உறுப்பினர்கள் தொடர்ந்து உன்னிப்பாகக் கவனம் செலுத்தி வர வேண்டும் எனவும், நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகள் என்பவற்றை மேம்படுத்துதல் என்பவற்றில் நம்பகமான முன்னேற்றத்தை எதிர்பார்க்க வேண்டும் எனவும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி